சுருக்கம்

நீர்வளத்துறை - தென்காசி மாவட்டம் - அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம் கட்டுமானப் பணி திட்டத்திற்காக தி/வா. Gammon India Ltd. Mumbai நிறுவனத்திற்கும் அரசுக்கும் இடையே காலநீட்டிப்பு காலத்தில் விலை வித்தியாசப் பட்டியல் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் நடுவர் மன்றத் தீர்ப்பின் மீது வழங்கப்பட்ட மற்றும் உத்திரவிடப்பட்ட தொகையான ரூ.3,18,38,371/-இல் நடுவர் கட்டணம் வழங்கப்பட்ட தொகையினை தவிர்த்து மீதமுள்ள தொகை ரூ.2,86,64,914/-இல் 25% தொகையான ரூ.71,66,229/-னை மட்டும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>நீர்வளத்(எஸ்2) துறை</u>

அரசாணை (டி) எண்.191 நாள். 28.08.2023

சோபகிருது, ஆவணி 11,

திருவள்ளுவர் ஆண்டு-2054

படிக்கப்பட்டவை:

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை, கடித எண். வபி / தவஅ / முவஅ:1 / கோ.29256 / 2023, நாள்.13.06.2023.

*/*/*

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை அவர்கள் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரின் கடிதத்தின் வாயிலாக நடுவர் மன்ற தீர்ப்புத் தொகையினை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவதற்கு அரசாணை மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி பின்வருமாறு கருத்துரு அனுப்பியுள்ளார்.

(அ) சிறப்புத் திட்டக் கோட்டம், அம்பாசமுத்திரம் அலுவலகம் 05.11.2009-தேதிக்கு முன்பு அடவிநயினார் கோவில் நீர்த்தேக்க திட்டக்கோட்டம் குடியிருப்பினை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வந்தது. அப்போது, செயற்பொறியாளர், நீர்வளத்துறை, சிறப்புத் திட்டக் கோட்டத்தின் மூலம் அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம் கட்டுமானப்பணி ஒப்பந்ததாரர் M/s. Gammon India Ltd, Mumbai என்ற நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு

வந்தது. இப்பணியானது 07.04.1998-ல் துவங்கப்பட்டு 4 வருட ஒப்பந்தக் காலத்தில் 06.04.2002-ல் முடிக்கப்பட வேண்டும். ஆனால், 2 காலநீட்டிப்புகள் பெறப்பட்டு பணிகள் 30.09.2002-ல் முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலும், அடவிநயினார் நீர்த்தேக்க திட்டத்தினை செயல்படுத்திய ஒப்பந்தக்காரர் M/s. Gammon India Ltd, Mumbai என்பவருக்கும் அரசுக்கும் இடையே காலநீட்டிப்பு காலத்தில் விலை வித்தியாசப் பட்டியல் தொடர்பாக நடுவர் மன்ற வழக்கு நடைபெற்று வந்தது. நடுவர் மன்ற தீர்ப்பு 17.09.2013 அன்று வழங்கப்பட்டது. அத்தீர்ப்பில் ரூ.3,18,38,871/- ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. தீர்ப்பு நகல் 18.12.2013-ல் பெறப்பட்டது. இத்தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்காக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் அரசு வழக்கறிஞரிடம் சட்டகருத்து பெறப்பட்டு, உயர்நீதிமன்ற மதுரை மேல்முறையீடு செய்வதற்காக சென்னை கிளையில் மனு எண் SR 36533 / 18.08.2014-ல் தாக்கல் செய்யப்பட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு எண்: CRP 2555/2014 என பதிவான இவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 22.04.2015 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அரசின் ஆணைப்படி, மனுமேல் முறையீட்டு வழக்கு மதுரை உயர்நீதிமன்றத்தில் 06.08.2015 அன்று தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எண் Review SR No:33723/2015 என பதிவு செய்யப்பட்டது. இம்மேல்முறையீட்டு மனு மீது எதிர் மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட உள்ளது எனவும், அவரிடமிருந்து ஏற்பளிப்பு கடிதம் கிடைக்கப் பெற்றதும் வழக்கின் பிரதான எண் பெறப்படும் என சிறப்பு வழக்கறிஞர் தெரிவித்த பின்னர் Review No.22/2016 என பதியப்பட்டு, 03.08.2017 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

(இ) இந்நிலையில், திருநெல்வேலி மாவட்டநீதிமன்றத்தில் CMP (MD) 643/2016 பதிவு செய்யப்பட்டு வழக்கு 27.01.2016 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் நீதிபதி அவர்கள் இழப்பீட்டுத் தொகை மிகவும் அதிகமாக இருப்பதால் தடைஉத்தரவு வழங்க இயலாது எனவும், வழக்கினை 05.02.2016-க்கு ஒத்தி வைத்து உத்திரவிடப்பட்டது.

(ஈ) இந்நிலையில் M/s. Gammon India Ltd, Mumbai நிறுவனத்தினர் நடுவர் நீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்தக் கேட்டு மாவட்ட உயர்நீதிமன்றம், திருநெல்வேலியில் EP 21/2015-இல் தொடரப்பட்ட

வழக்கு 15.02.2016-இல் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் இந்நிறுவனத்தினர் திருநெல்வேலி, மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் தொடர்ந்த EP வழக்கு எண்.03/2016 26.03.2016 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கின் மீது 29.11.2016 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் திருநெல்வேலி, திட்டங்கள் வட்ட அலுவலக வங்கிக் கணக்கினை முடக்கம் செய்திடவும் மற்றும் ஈப்புகளை ஜப்தி செய்திடவும் உத்தரவிடப்பட்டது. இவ்விவரத்தினை எதிர்த்து தடை உத்தரவு பெற சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP (MD) No. 398/2017 மற்றும் CMP (MD) 1989/2017 என தொடரப்பட்டு 01.03.2017 அன்று நடைபெற்ற விசாரணையில் EP No. 03/2016 மீது தடைஉத்தரவு (Stay Order) பெறப்பட்டது. இந்நாள்வரை CRP (MD) No.398/2017 நிலுவையில் உள்ளது.

(உ) இதற்கு பின்னர் M/s. Gammon India Ltd, Mumbai நிறுவனத்தினரால் மாவட்ட முதன்மை நீதிமன்றம், திருநெல்வேலியில் EP No. 96/2021 என்ற வழக்கு தொடரப்பட்டது. 01.11.2022 அன்று சமரச பேச்சு வார்த்தைக்கு மேற்கண்ட நிறுவனத்தின் வழக்கறிஞரால் கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கின் மீது சமரச பேச்சு வார்த்தைக்கு உடன்பாடு இல்லை என இத்துறையின் வாயிலாக மாண்புமிகு நீதிபதி அவர்களிடம் 21.11.2022 தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற EP No. 96/2021 மீதான விசாரணையில் 11.04.2023 அன்று வழங்கப்பட்ட உத்தரவில் 06.06.2023 அன்று அரசு வாகனங்களை ஜப்தி செய்யவும் மூன்று நாட்களுக்குள் பேட்டாகட்டவும் உத்தரவிடப்பட்டது. மேற்படி தீர்ப்பிற்கு தடைஉத்தரவு வழங்ககேட்டுக் சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP (MD) No. 850/2023 என வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் 02.06.2023 அன்று திருநெல்வேலி, மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு எண்.EP No. 96/2021 மீது நடுவர் உயர்நீதிமன்ற தீர்ப்பில் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட உத்தரவிட்ட தொகையில் 25 சதவீத தொகையினை நான்கு வார காலத்திற்குள் வைப்பீடு செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கினை தொடர்ந்து நடத்திட அரசாணை (ஆர்டி) எண்.211 நீர்வள (Q1) துறை, நாள் 29.05.2023-ல் திரு.ஆர்பாஸ்கரன், AAG-IV அவர்களை நியமித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவின்படி 25 சதவீத தொகை விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| நடுவர் தீர்ப்பின்படி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை | ரூ.3,18,38,871/ |
| முன்னர் வழங்கப்பட்டநடுவர்மன்றவழக்கு கட்டணம் (Arbitration Fees) | -ரூ.31,73,957/ |
| (அரசாணை (டி) எண்.327 பொப (ப்பி2) துறை நாள் 29.10.2018)-ல் மீதம் வழங்கப்படவேண்டியதொகை | -ரூ.2,86,64,914/ |
| நீதிமன்ற உத்தரவின்படி 25 சதவீத தொகை | ரூ. 71,66,229/ |

2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத் துறை அவர்கள் தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, மதுரை மண்டலம், மதுரை அவர்கள் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவினை நான்குவார காலத்திற்குள் அமல்படுத்தும் பொருட்டு ரூ.71,66,229/-ஐ அங்கீகரித்து அரசின் உரிய அனுமதியினை பெற்று வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்களின் கருத்துருவினை ஏற்று தென்காசி மாவட்டம், அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கம் கட்டுமானப் பணி திட்டத்திற்காக தி/வா. Gammon India Ltd, Mumbai நிறுவனத்திற்கும் அரசுக்கும் இடையே காலநீட்டிப்பு காலத்தில் விலை வித்தியாசப் பட்டியல் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் நடுவர் மன்றத் தீர்ப்பின் மீது வழங்கப்பட்ட மற்றும் உத்திரவிடப்பட்ட தொகையான ரூ.3,18,38,371/-இல் நடுவர் கட்டணம் வழங்கப்பட்ட தொகையினை தவிர்த்து மீதமுள்ள தொகை ரூ.2,86,64,914-/-இல் 25% தொகையான ரூ.71,66,229/- (ரூபாய் எழுபத்தொன்று இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து இருநூற்று இருபத்தொன்பது மட்டும்) நீதிமன்றத்தில் வைப்பீடு செய்வதற்கு நிதி ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

4701 – நடுத்தரப் பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 01 – தாமிரபரணி வடிநிலம் – 800 – ஏனைய செலவு -மாநிலச் செலவினங்கள் – AA – நீர்தேக்கங்கள் – 416 பெரும் பணிகள் – 01 - பெரும் பணிகள்.

(IFHRMS DPC : 4701 – 01 – 800 – AA – 41601)

பின்னர் மேற்காணும் தொகை பின்வரும் கணக்குத் தலைப்பில் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.

K-வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (B) வட்டி பெறா வைப்பீடுகள் - 8443-00 உரிமையியல் வைப்பீடுகள் 104 உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள் - AA உரிமையியல் நீதிமன்ற வைப்பீடுகள் - 801 வரவுகள் - 02 வட்டி பெறாதவை.

(IFHRMS DPC : 8443-00-104- AA-80102)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதி ரூ.71,66,229/-, 2023 - 2024-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2023 - 2024-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்யவிருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை (மற்றும்) தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் / துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை நிதித் (உட்கட்டமைப்பு-2 / வ.செ.பொ.I) துறைக்குத் தவறாமல் அனுப்புமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), நீர்வள ஆதாரத்துறை, சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. அரசு ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவும், வைப்பீடு செய்யப்பட்ட விவரத்தினை அரசுக்கு தெரிவிக்குமாறும், மேல்முறையீட்டு மனுவினை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளும்படியும், அத்தகவலை நடுவர் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை மற்றும் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இவ்வழக்கில் நடுவர் தீர்ப்பு வழங்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகள் காலதாமதம் ஏற்படுத்தியது மற்றும் இதன் மூலம் அரசுக்கு ஏற்படும் நிதி இழப்பு குறித்தும் உரிய விசாரணை மேற்கொள்ளவும், அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 2894/உள்கட்டமைப்புகள் - II/2023, நாள். 28.08.2023-ன் பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.831 (எண்ணூற்று முப்பத்தொன்று)-உடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No. 2023080831).

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:
முதன்மைத் தலைமைப் பொறியாளர்மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது) நீர்வள ஆதாரத்துறை சென்னை-5.
தலைமைப்பொறியாளர், நீர்வளத்துறை, மதுரை மண்டலம், மதுரை-2.
முதன்மை மாநில கணக்குத் தலைவர், (கணக்குகள் மற்றும பணிவரவுகள்), சென்னை-18.
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி.
கருவூல அலுவலர், திருநெல்வேலி.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
உடனுறைத் தணிக்கை அலுவலர்,
(The Resident Audit Officer, O/o.Principal Accountant General (General and Social Sector Audit) தலைமைச் செயலகம், சென்னை-9.

**நகல்**
மாண்புமிகு அமைச்சர் (நீர்வளம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 9.
நிதி(வ.செ.பொ.II/உ.க II / வ.செ.பொ I / வ.வ. I) சென்னை-9.
நீர்வளத் (அ.ந.மு2) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28/8/2023
பிரிவு அலுவலர்
28/8/2023